# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் II பரீட்சை – 2021 சனவரி

## (204) வணிக முகாமைத்துவம்

இவ்வினாத்தாள் **A, B, C** என 3 பகுதிகளையும் 07 வினாக்களையும் கொண்டுள்ளது. இங்கு கேட்கப்பட்ட எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குமாறு தேவைப்படுத்தப்பட்டது.

### பகுதி A

நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

**வினா இல. 01**

இவ்வினா 25 புள்ளிகளுக்கான பதினைந்து (15) OTQs ஐக் கொண்டுள்ளது. இல. **1.1** தொடக்கம் **1.5** வரையுள்ள வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்து, தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை விடைப்புத்தகத்தில் எழுதுமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியான விடைகளைத் தெரிவு செய்திருந்தனர்.

இல. **1.6** தொடக்கம் **1.10** வரையான வினாக்களைப் பொறுத்தவரையில், அங்கு அடைப்புக்குறிக்குள் தரப்பட்ட சொல் / சொற்களில் இருந்து சரியான விடையைத் தெரிவு செய்யுமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் அறிவுறுத்தல்களைச் சரியாகப் பின்பற்றிய போதிலும் சிலர் அறிவுறுத்தல்களைப் பின்பற்றியிருக்கவில்லை. அதிகளவானவர்கள் வெற்றிகரமானளவு புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

இல. **1.11** தொடக்கம் **1.15** வரையான வினாக்களுக்கு குறுகிய விடைகளை எழுதுமாறு கேட்கப்பட்டது. இந்தப் பகுதிக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்திகரமானதாக அமையவில்லை. அவற்றுக்கான காரணங்களாக கீழ்வருவன அமைந்திருந்தன:

**வினா இல. 1.11**

இங்கு குழுவாகத் தீர்மானமெடுப்பதிலுள்ள 2 அனுகூலங்களை நிரற்படுத்துமாறு கேட்கப்பட்டது. குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் குழுத் தீர்மானமெடுத்தலின் அனுகூலங்களைச் சரியாகக் குறிப்பிட்டு முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். ஆயினும் ஒரு கையளவு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் பாடப்பரப்புகளில் போதிய விளக்கத்தை கொண்டிருக்கவில்லை.

**வினா இல. 1.12**

இங்கு, வழங்கல் சங்கிலி முகாமைத்துவத்தின் கூறுகள் பற்றிய அறிவு பரீட்சிக்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகளிடம் வழங்கல் சங்கிலி முகாமைத்துவத்தின் கூறுகள் பற்றிய சரியான விளக்கம் காணப்படவில்லை என்பது அவர்களது விடைகளிலிருந்து தெரிய வருகிறது. எனவே, அவர்களால் வெற்றிகரமாகப் புள்ளிகளைப் பெற இயலவில்லை.

**வினா இல. 1.13**

இங்கு, மனித வள முகாமையின் நோக்கங்களைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. மனித வள முகாமைக்குப் பதிலாக முகாமையின் நோக்கங்கள் குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பங்களைக் காணக் கூடியதாக இருந்தது. இது, அவர்கள் வினாவைச் சரியாக வாசிக்காததை உணர்த்துகிறது.

**வினா இல. 1.14**

இவ்வினாவின் மூலம் ஊழியர்களது மனக்குறைகளுக்கான காரணங்கள் பற்றிய அறிவு பரீட்சிக்கப்பட்டது. பரீட்சார்த்திகளிடம் மனக்குறைகள் தொடர்பில் போதிய அறிவு காணப்படாமையை அவதானிக்க முடிந்தது.

**வினா இல. 1.15**

இங்கு, வணிகச் செயன்முறை மீள் - பொறிமுறைப்படுத்தலின் பண்புகளைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இந்த எண்ணக்கரு பற்றிய எவ்வித எண்ணவோட்டங் களையும் கொண்டிருக்கவில்லை. எனவே, அவர்களால் புள்ளிகளைப் பெற முடியவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் காணப்பட்டது.**

## பகுதி B

இப்பகுதி ஒவ்வொன்றும் 10 புள்ளிகளைக் கொண்ட மொத்தமாக 50 புள்ளிகளுக்காக 05 வினாக்களை உள்ளடக்கியிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகளின் ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மட்டம் திருப்திகரமானதாக இருந்தது. எவ்வாறாயினும், ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரம் ஒரு சில வினாக்களுக்கு விடையளித்திருக்காததுடன் வேறு சிலர் சம்பந்தமற்ற விடைகளை எழுதியிருந்தனர்.

**வினா இல. 02**

இவ்வினாவில் வணிகச் சூழலும் முகாமைச் சிந்தனையும் பற்றிப் பரீட்சிக்கப்பட்டது. இவ்வினா மூன்று பிரிவுகளைக் கொண்டிருந்தது.

**(a)** இங்கு, அதிகாரத்துவ முகாமைக் கோட்பாட்டின் பண்புகளைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் வினாவை விளங்கிக்கொள்ளாது அல்லது வினா பற்றிய சரியான புரிதல் இல்லாததன் காரணமாக தவறான விடைகளை வழங்கியிருந்தனர். வேறு சிலர் இவ்வினாவுக்கு விடையளித்திருக்கவில்லை. இந்தப் பாடப்பரப்பில் பரீட்சார்த்திகளின் புரிதல் மிகவும் மோசமாக இருப்பதையே அவர்களது விடைகளிலிருந்து அவதானிக்க முடிகிறது.

**(b)** இங்கு, முகாமையாளர் ஒருவரின் திறன்களை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. இந்த வினாவுக்கு பலர் சரியான விடைகளை அளித்திருந்தனர். இவ்வினாவுக்கான செயலாற்றுகை மிகவும் சிறப்பாக இருந்தது.

**(c)** இவ்வினாவில், கோவிட் 19 நோய்ப் பரவல் காரணமாக முகாமையில் ஏற்பட்ட புதிய போக்குகள் 2 இனை விபரிக்குமாறு கேட்கப்பட்டிருந்தது. இது நடப்பு கால வினாவாக இருந்ததால் அதிகளவான பரீட்சார்த்திகளால் வெற்றிகரமாக விடையளிக்கக்கூடியதாக இருந்ததுடன் புள்ளிகளையும் பெற்றுக்கொள்ள முடிந்தது.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் காணப்பட்டது.**

**வினா இல. 03**

இவ்வினாவில் முகாமைத் திட்டமிடல் பரீட்சிக்கப்பட்டது. இவ்வினா 3 பிரிவுகளைக் கொண்டிருந்தது. இப்பிரிவுகளுக்கு அதிகளவான பரீட்சார்த்திகள் மிகவும் நல்ல புள்ளிகளைப் பெற்றிருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

**(a)** இங்கு, பகுத்தறிவான தீர்மானமெடுத்தல் செயன்முறையின் படிமுறைகளைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. சிலர் பகுத்தறிவான தீர்மானமெடுத்தல் செயன்முறையின் படிமுறைகளை எழுதுவதற்குப் பதிலாக கட்டுப்படுத்தல் செயன்முறையின் படிமுறைகளை எழுதியிருந்தனர்.

**(b)** இங்கு, நிறுவனமொன்றிற்கான திட்டமிடலின் முக்கியத்துவத்தை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. இவ்வினாவுக்கு விடையளிக்கும்போது, சிலர் திட்டமிடலை ஒழுங்கமைப்புடன் குழப்பி எழுதியிருந்தனர். ஒரு கையளவு பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்கவில்லை.

**(c)** இங்கு, தரப்பட்ட கம்பனியின் உற்பத்தி முகாமையாளரால் தயாரிக்கப்பட்ட திட்டங்கள் தோல்வியடைந்தமைக்கான காரணங்களைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் மிகவும் வெற்றிகரமாக விடையளித்து, முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

**வினா இல. 04**

இவ்வினா தொழிற்பாட்டு முகாமைத்துவம் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது.

**(a)** தொழிற்பாட்டு முகாமைத்துவத்தின் 4 தொழிற்பாடுகளை இனங்காணுமாறு கேட்கப்பட்டது. சில பரீட்சார்த்திகள் தொழிற்பாடுகளுக்கான உதாரணங்களைத் தந்து சரியான விடைகளை எழுதியிருந்தனர். வேறு சில பரீட்சார்த்திகளிடம் பாட விடயம் பற்றிய எவ்வித விளக்கமும் காணப்படாததை அவர்களது விடைகளிலிருந்து அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

**(b)** தற்காலச் சூழலில் தொழிற்பாட்டு முகாமைத்துவத்தில் பயன்படுத்தப்படுகின்ற புதிய தொழினுட்பங்களைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. இது உயர்ந்தளவு புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக அமைந்திருந்த ஒரு இலகுவான வினாவாகும். அதிகளவான பரீட்சார்த்திகளால் செயற்கை நுண்ணறிவு, கணினி உதவியளிக்கப்பட்ட வடிவமைப்பு, கணினி உதவியளிக்கப்பட்ட உற்பத்தி போன்ற புதிய தொழினுட்பங்களை எழுதியதன் மூலம் மிகவும் சிறந்த புள்ளிகளைப் பெறக்கூடியதாக இருந்தது.

**(c)** இங்கு அதிகாரக் கையளிப்பின் அனுகூலங்களை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. சிலர் அவற்றை எவ்வித விபரிப்புகளுமின்றிக் குறிப்பிட்டிருந்தனர். மேலும், வேறு சிலரிடம் இவ்விடயம் பற்றிய எவ்வித சரியான புரிதலும் காணப்படவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் காணப்பட்டது.**

**வினா இல. 05**

இவ்வினா வணிக நிறுவனம் ஒன்றிற்கு பயனுறுதிவாய்ந்த தொடர்பாடலொன்றின் முக்கியத்துவம் மற்றும் தற்கால வணிகச் சூழலில் அதன் தாக்கம் என்பன பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது.

**(a)** இந்தப் பகுதி, பயனுறுதிமிக்க தொடர்பாடலிலிருந்து நிறுவனமொன்று பெற்றுக்கொள்ளக்கூடிய ஏதாவது நன்மைகளைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் தமது பொது அறிவைப் பயன்படுத்தி அவ்வாறான நன்மைகளைச் சரியாகக் குறிப்பிட்டிருந்ததுடன் அதற்கான முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். வேறு சிலர் விடைகளை விபரமாக விபரித்ததன் மூலம் தமது நேரத்தை வீணடித்திருந்தனர்.

**(b)** இங்கு கட்டுப்படுத்தல் செயன்முறை ஒன்றின் படிமுறைகளைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. எவ்வாறாயினும், இதற்கு அளிக்கப்பட்ட விடைகள் திருப்திகரமானதாக இருக்கவில்லை. பரீட்சார்த்திகள் பரீட்சைக்காகத் தங்களைத் நன்றாகத் தயார்படுத்தவில்லை என்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. ஒரு கையளவு பரீட்சார்த்திகள் கட்டுப்படுத்தல் செயன்முறை என்றால் என்ன என்பது பற்றியே தெரியாதிருந்தனர். எனவே, அவர்கள் இந்த வினாவுக்கான விடையாக முகாமைத்துவத்திலுள்ள பல்வேறு எண்ணக்கருக்களையும் எழுதியிருந்தனர்.

**(c)** இந்த வினா, கோவிட் 19 நோய்ப் பரவல் காரணமாக விநியோகிக்கப்பட்ட புதிய சுகாதார வழிகாட்டல்கள் காரணமாக கட்டுப்படுத்தலில் நிறுவனங்களால் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய காரணிகளைப் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் தங்களது பொது அறிவைப் பயன்படுத்தி இவ்வினாவுக்குச் சரியான விடை அளித்திருந்தனர். இவ்வினாவுக்கான செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் காணப்படவில்லை.**

**வினா இல. 06**

இவ்வினா சந்தைப்படுத்தல் தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்திருந்தது. இவ்வினா 3 உப வினாக்களைக் கொண்டிருந்தது.

**(a)** இங்கு, சந்தைப்படுத்தல் கலவையின் மாறிகளைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் இதற்குச் சரியாக விடையளித்து, முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**(b)** இவ்வினா, வெற்றிகரமான பண்டக்குறி ஒன்றின் தேவைப்பாடுகளைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது. இவ்வினாவுக்கான செயலாற்றுகை மிகவும் மோசமான மட்டத்தில் இருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் பண்டக்குறியின் தேவைப்பாடுகளை எழுதுவதற்குப் பதிலாக அதன் முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டிருந்தனர். அவர்களால் வினாவில் கேட்கப்பட்டதைச் சரியாக அடையாளம் காண முடியவில்லை. இதனால், ஒரு கையளவு பரீட்சார்த்திகளால் மாத்திரமே இப்பகுதிக்கு முழுப் புள்ளிகளையும் பெற முடிந்திருந்தது.

**(c)** இவ்வினா, நிறுவனமொன்றிற்கு பண்டக்குறியிடல் ஏன் முக்கியமானது என்பதற்கான 3 காரணங்களைக் விபரிக்குமாறு கேட்டிருந்தது. எவ்வாறாயினும், அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவைச் சரியாக விளங்கிக்கொள்ளவில்லை. சில பரீட்சார்த்திகள் பகுதி (b) இற்கும் பகுதி (c) இற்கு ஒரே விடைகளை வழங்கியிருந்தனர். எவ்வாறாயினும், இந்தப் பகுதிக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டது.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

## <u>பகுதி C</u>

**வினா இல. 07**

இது ஒரு விடய ஆய்வு வினாவாகும். தரப்பட்ட விவரணத்திற்கு எவ்வாறு கோட்பாட்டு ரீதியான காரணிகளைப் பிரயோகிக்கலாம் என்பதைப் பரீட்சிப்பதற்காக இவ்வினா அமைக்கப்பட்டிருந்தது. இவ்வினா 5 பகுதிகளைக் கொண்டது. அவையாவன **(a), (b), (c), (d)** மற்றும் **(e)**.

**(a)** இங்கு, **சுசந்தவின் வணிகத்திற்குப்** பயன்படுத்தக்கூடிய டிஜிடல் சந்தைப்படுத்தல் முறைகளை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. பரீட்சார்த்திகளால் மிகவும் இலகுவாக விளங்கிக்கொள்ளக்கூடிய ஒரு எளிமையான வினாவாக இது இருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் வெற்றிகரமான விடைகளை அளித்திருந்தனர். ஆயினும் சில பரீட்சார்த்திகள் இயங்கலை (ஒன்லைன்) மற்றும் சமூக ஊடக வலையமைப்புகள் பற்றி தேவையற்ற வகையில் விபரித்திருந்ததுடன் ஏனைய விடயங்கள் பற்றி வலியுறுத்தியிருக்கவில்லை.

**(b)** இங்கு, PESTEL பகுப்பாய்வைப் பயன்படுத்தி, சூழல் பகுப்பாய்வு எவ்வாறு கவனத்தில் கொள்ளப்படக்கூடும் என்பதை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. எவ்வாறாயினும், அதிகளவான பரீட்சார்த்திகள் PESTEL ஐப் பயன்படுத்தாது PEST ஐப் பயன்படுத்தி விபரித்திருந்தனர். அதற்கிணங்க, சூழல் காரணிகள் (E) மற்றும் சட்டக் காரணிகள் (L) என்பன கவனத்தில் கொள்ளப்படவில்லை. எனினும், சில பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**(c)** இங்கு, மனித வள மிகையைச் சமாளிப்பதற்கான 4 தந்திரோபாயங்களை இனங்காணுமாறு கேட்கப்பட்டது. இது ஒரு இலகுவான வினாவாக இருந்தபோதிலும், குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு நன்றாகச் விடையளிக்கவில்லை. பரீட்சைக்கான பரீட்சார்த்திகளின் தயார்படுத்தல் திருப்திகரமாக இல்லை என்பதை அவர்கள் அளித்த விடைகள் புலப்படுத்துகின்றன.

**(d)** இங்கு, மாற்றத்திற்கான தடைகளைச் சமாளிப்பதற்கான இரண்டு முறைகளை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. இப்பகுதிக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை மிகச் சிறப்பாக இருந்தது.

**(e)** இங்கு, தற்காலத் தலைவர் ஒருவரின் பண்புகளைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகளால் சரியாக விடையளித்து, முழுப் புள்ளிகளையும் பெற முடிந்திருந்தது. இப்பகுதிக்கான செயலாற்றுகையும் திருப்திகரமானதாக இருந்தது.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் காணப்பட்டது.**

**<u>பரீட்சார்த்திகளின் ஆற்றல் மட்டத்தை மேம்படுத்தும் பொருட்டு கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய பொதுவான விடயங்கள்</u>:**

**(1)** பாடத்திட்டத்தை / பாடப்புத்தகத்தை நன்றாகக் கற்கவும்.

**(2)** வினாத்தாளைப் பெற்றதும் அதிலுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்கவும் (இந்த நோக்கத்திற்காக மேலதிக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது).

**(3)** பரீட்சார்த்திகள் வினாவைப் பல தடவைகள் வாசித்து அதில் என்ன கேட்கப்பட்டுள்ளது என்பதை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். நேரடியான விடையொன்று எதிர்பார்க்கப்படும் போது தேவையற்ற விவரிப்புகளையும் விபரங்களையும் எழுதுவதைத் தவிர்க்கவும்.

**(4)** விடைகள் ஒரே மொழியில் மாத்திரமே எழுதப்பட வேண்டும். அது நீங்கள் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது குறிப்பிட்ட மொழியாக இருப்பதுடன் ஒவ்வொரு வினாவுக்குமான விடைகள் ஒரு புதிய பக்கத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

**(5)** பரீட்சையின்போது நேரத்தை வினைத்திறனான முறையில் பயன்படுத்தவும்.

**(6)** விடைப்புத்தகத்தைக் கையளிப்பதற்கு முன்னர், சகல வினா இலக்கங்களும் உங்களுடைய சுட்டெண்ணும் சரியாக எழுதப்பட்டிருக்கிறதா என்பதை இருமுறை பரீட்சித்துக் கொள்ளவும்.

**(7)** ''செயல் வினைச்சொல் செவ்வை நிரல்'' வினாத்தாளின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒவ்வொரு வினைச் சொல்லைக் கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் அந்த நிரலில் தரப்பட்ட வரைவிலக்கணங் களின் அடிப்படையில் விடையளித்தல் வேண்டும்.

**(8)** கையெழுத்து தெளிவாக இருப்பதையும் விடைகளுக்கான வினா இலக்கங்கள் சரியாக எழுதப்பட்டுள்ளன என்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

**(9)** சுய கற்றல் புத்தகம், கட்டுரைகள் மற்றும் சஞ்சிகைகளை வாசிப்பது பயனுடையதாகும்.

**(10)** உங்களது அறிவை மேம்படுத்திக்கொள்ளும் பொருட்டு கடந்தகால வினாத்தாள்களுக்கு விடையெழுதிப் பயிற்சி பெறுவது சிறந்தது.

**(11)** பரீட்சையில் சித்தியடையும் உறுதியான நோக்கத்துடனும் நல்ல தயார்படுத்தலுடனும் பரீட்சைக்கு முகங்கொடுக்கவும்.

- * * * -